


**27. 02. 2026**

தலைப்புச் செய்திகள்

1. ஐரோப்பிய நாடுகள் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால் நாட்டின் ஜவுளித்துறை பன்மடங்கு மேம்படும் என குடியரசு துணைத் தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

2. இலகுவான வர்த்தக நடைமுறைகளால் தேசம் துரித வளர்ச்சிப் பாதையில் முன்னேறி செல்லும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

3. தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அனைத்து வாக்குச் சாவடிகளும் முழுமையாக கண்காணிக்கப்படும் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ்குமார் கூறியுள்ளார்.

4. கோவை காந்திபுரத்தில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பெரியார் நூலகத்தை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் இன்று ஆய்வுசெய்தார்.

5. புனே சேலஞ்சர் கோப்பை டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் சித்தாந்த் பாந்தியா,

பல்கேரியாவின் அலெக்சாண்டர் இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

குடியரசு துணை தலைவர்

ஐரோப்பிய நாடுகள் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால் நாட்டின் ஜவுளித்துறை பலமடங்கு வளர்ச்சியடையும் என குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இந்திய கைத்தறி தொழில்நுட்பக்கழக கல்லூரியில் 30 கோடி ரூபாய் மதிப்பில் புதிய கல்வி வளாகத்தை இன்று திறந்துவைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், சேலத்தில் உள்ள நெசவு மையத்திற்கு வரும் வழியில் தடையாக உள்ள ரயில்வே கேட் பகுதியில் தரைப்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

சின்னாளப்பட்டி, ஆண்டிப்பட்டி, புளியம்பட்டி உட்பட தமிழகத்தின் பல்வேறு நகரங்கள் ஜவுளித்துறையில் சிறந்து விளங்குவதாக குறிப்பிட்டார்.

... வாய்ஸ் ...

தொடர்ந்து நடைபெற்ற கைத்தறி பொருட்கள் கண்காட்சியையும் அவர் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங், ஜவுளித் துறையில் அனைவரும்

குறைந்தபட்சம் 5 லட்சம் ரூபாய் முதல் 10 லட்சம் ரூபாய் வரை வருவாய் ஈட்டுவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக கூறினார்.

திருப்பூரில் ஜவுளி ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தடையற்ற வர்த்தகம், 19 நாடுகளுக்கு மட்டுமே இருந்த நிலையில் தற்போது 56 நாடுகளுடன் தடையற்ற வர்த்தகம் நடைபெற்று வருவதாக எடுத்துரைத்தார்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக நாட்டில் ஜவுளித்துறைதான் அதிக வேலைவாய்ப்புகளை வழங்கி வருவதை அமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

எளிதான வர்த்தக நடைமுறைகள் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றால் தேசம் விரைவான வளர்ச்சிப் பாதையில் முன்னேறி செல்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பட்ஜெட்டிற்கு பிந்தைய முதலாவது இணையவழி கருத்தரங்கில் இன்று உரையாற்றிய பிரதமர், 2047-ம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குதல் எனும் இலக்கை எட்ட சீர்த்திருத்தம், ஒதுக்கீடு, மாற்றம் முக்கியம் என எடுத்துரைத்தார்.

தேசத்தை கட்டியெழுப்புவதில் தொடர்ச்சியான செயல்முறையின் முக்கியத்துவத்தை பிரதமர் குறிப்பிட்டார்.

சீர்த்திருத்தங்கள் அறிவிப்புகளோடு நின்று விடாமல், அதன் செயலாகத்தில் முழுமை பெறுவதாக சுட்டிகாட்டினார்.

செயற்கை நுண்ணறிவு, தர ஆய்வுகள் உள்ளிட்டவற்றால் வெளிப்படைத்தன்மை, வேகம், துல்லியம் உள்ளிட்டவற்றை கொண்டுவர முடியும் என்றார்.

கடந்த 10 ஆண்டுகளில் உள்கட்டமைப்பிற்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக கூறிய அவர், நெடுஞ்சாலைகள், ரயில்வே, துறைமுகங்கள், டிஜிட்டல் வலையமைப்புகள், எரிசக்தி அமைப்புகள் உள்ளிட்டவற்றின் மேம்பாட்டை எடுத்துரைத்தார்.

11 ஆண்டுகளுக்கு முன் பட்ஜெட்டில் 2 லட்சம் கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டதை சுட்டிக்காட்டிய பிரதமர், அண்மை பட்ஜெட்டில் 12 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கப்பட்டதை குறிப்பிட்டார்.

தொழில்துறை வல்லுநர்கள், கல்வியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், பகுப்பாய்வாளர்கள் ஒன்றிணைந்து பணியாற்றும் போதுதான் திட்டங்கள் முழுமைபெறும் என பிரதமர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

தர்மேந்திர பிரதான்

மத்திய இடைநிலை கல்வி வாரியம் NCERT பாடப் புத்தகத்தில் நீதித்துறை தொடர்பான சர்ச்சைக்குரிய கருத்துக்கள் இடம்பெற்றது துரதிருஷ்டவசமானது என்றும், இவ்விஷயத்தை அரசு மிகவும் தீவிரமாக பரிசீலித்து

வருவதாகவும் மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவை அமைச்சகம் முறையாக பின்பற்றும் என்று கூறிய அவர், நீதித்துறை அமைப்பை அவமதிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என தெளிவுப்படுத்தினார்.

NCERT புத்தகத்தில் இதுபோன்ற செய்தியை சேர்த்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டதாகவும் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

தீவிரவாதம் மனித உரிமைகளை மீறும் மிகவும் மோசமான செயல்களில் ஒன்றாகும் என்றும், அதனை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது என்றும் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் மனித உரிமைகள் குழுக்கூட்டத்தில் காணொலி மூலம் உரையாற்றிய அவர், தீவிரவாத செயல்களுக்கான பூஜ்ஜிய சகிப்புத்தன்மையை ஐ.நா. ஆதாரிக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖

S. P. சிங் பாகேல்

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் மீன் உற்பத்தி 126 சதவிகிதம்

அதிகரித்துள்ளதாக மத்திய மீன்வளத்துறை இணையமைச்சர் திரு. S. P. சிங் பாகேல் தெரிவித்துள்ளார்.

விசாகப்பட்டினத்தில் மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவன மையத்தை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசியஅவர், ஆழ்கடல் மீன்பிடி புதிய கொள்கைகள் காரணமாக 62 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

அந்தமான் நிக்கோபார் மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள டுனா மீன்பிடி தொகுப்புகள் உள்ளிட்ட திட்டங்களை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖

அரவிந்த் கெஜ்ரிவால்

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட டில்லி முன்னாள் முதலமைச்கர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால், திரு. மனீஷ் சிசோடியா உட்பட 23 பேரையும் விடுவித்து டெல்லி நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக அரசு தரப்பில் எந்த ஆதாரமும் இல்லை என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

ஞானேஷ்குமார்

தமிழ்நாட்டில் 234 சட்டமன்ற தொகுதிகளில், 188 தொகுதிகள், பொது தொகுதிகளாக உள்ளன என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக்கு பின்னர் சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், சிறப்பான ஜனநாயக பாரம்பரியம் கொண்ட மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்றார்.

மாநிலத்தில் 75 ஆயிரத்து 32 வாக்குச்சாவடிகள் உள்ளதாகவும், பன்னிரெண்டரை லட்சம் வாக்காளர்கள் முதல்முறையாக வாக்களிக்கவுள்ளதாகவும் திரு. ஞானேஷ்குமார் கூறினார்.

அனைத்து வாக்குச்சாவடிகளும் முழுமையாக காணொலி மூலம் கண்காணிக்கப்படும் என்றும்,

வாக்குச்சாவடி மையங்களில் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் உறுதி செய்யப்படும் என்றார்.

2 மணி நேரத்திற்கு ஒருமுறை வாக்குப்பதிவு நிலவரம் வெளியிடப்படும் என்றும் கூறினார்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் வண்ண புகைப்படங்கள் இடம்பெறும் என்றார்.

கடந்த 2 நாட்களாக தலைமை தேர்தல் ஆணையர் தலைமையிலான குழு அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகள், மாவட்ட ஆட்சித்தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள் உள்ளிட்டோருடன் ஆலோசனை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

கோவை காந்திபுரத்தில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பெரியார் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் இன்று ஆய்வு செய்தார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக கோவை சென்றுள்ள முதலமைச்சர் கல்லூரி மாணவிகளிடையே கலந்துரையாடினார்.

❖❖❖❖❖❖❖❖

பன்னீர் செல்வம்

முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர் செல்வம் தி.மு.க வில் இன்று இணைந்தார்.

சென்னை அண்ணா அறிவாலத்தில் திமுக தலைவரும் முதலமைச்சருமான திரு. மு. க. ஸ்டாலின் முன்னிலையில் திரு. ஓ. பன்னீர் செல்வம் தனது ஆதரவாளர்களுடன் திமுக-வில் இணைந்துள்ளார்.

இதனையடுத்து போடிநாயக்கனூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை திரு. ஓ. பன்னீர் செல்வமும்,

உசிலம்பட்டி சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை திரு. ஐய்யப்பனும் ராஜினாமா செய்தனர்.

❖❖❖❖❖❖❖❖

இருவரி

பெரம்பலூர் மாவட்டத்தில் 10-வது புத்தகத் திருவிழாவை மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சிவசங்கர் இன்று தொடங்கிவைக்கிறார்.

வரும் 8-ம் தேதிவரை நடைபெறவுள்ள இவ்விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட பதிப்பகங்களின் வெளியீடுகள் இடம்பெறவுள்ளன.

நாகை மாவட்டம் கீழையூர் பகுதிகளில் தாளடி நெற்பயிரை வறட்சியிலிருந்து மீட்க மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாமக்கல் மாவட்டத்தில் தாயுமானவர் திட்டத்தின் கீழ் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்தம் இல்லங்களுக்கு சென்று நியாயவிலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வரும் 2, 3 தேதிகளில் விநியோகம் செய்யப்படும் என்று ஆட்சித்தலைவர் திருமதி. துர்காமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் தானியங்கி ஓட்டுநர் தேர்வுதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. பொற்கொடி தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

முருங்கை மதிப்பு கூட்டு பயிற்சி

மத்திய அரசின் உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் திருச்சி தூய வளனார் கல்லூரி சார்பில் கல்லூரி மாணாக்கருக்கான முருங்கை மதிப்பு கூட்டு பயிற்சி

நாகமங்கலத்தில் உள்ள கல்லூரி மூலிகை தோட்டத்தில் நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖

கச்சத்தீவு

கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா இன்றுமாலை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

பணி ஓய்வு

திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்தின் உதவி இயக்குநரும், தர்மபுரி வானொலி நிலைய நிகழ்ச்சி பிரிவு தலைவருமான திரு.பி. சின்னச்சாமி இன்று பணி ஓய்வு பெறுகிறார்.

35 ஆண்டுகள் பணியாற்றிய இவர் சென்னை, திருநெல்வேலி வானொலி நிலையங்களிலும், பணியாற்றியுள்ளார்.

பண்ணை இல்ல பிரிவிலும் பணிபுரிந்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

புனே சேலஞ்சர் கோப்பை டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் சித்தாந்த் பாந்தியா,

பல்கேரியாவின் அலெக்சாண்டர் இணை – தென்கொரியா, பின்லாந்து இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖